புதிய அவையம்
(Peer -Reviewed Journal)
ISSN: 2456-821X
Vol. 08, Issue 01 - June 2024

# பண்டைத் தமிழ் இலக்கியங்களில் துறவறம்

**முனைவர் ஆ. சந்திரன்,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

## முன்னுரை

இரவு பகல் என்பன ஒரு நாளின் இரு கூறுகள். அவை போல இல்லறம் துறவறம் என்பன மனித வாழ்வின் இரு கூறுகளாகும். துறவை மேற்கொள்பவர்களைத் துறவிகள் என்றழைக்கின்றனர். அவர்கள் இளமை, அழகு, யாக்கை, செல்வம் ஆகியன நிலைத்து நில்லாதன என்பதனை நன்கு உணர்ந்தவர்கள். அதனால் ‘நான்’ என்னும் அகப்பற்றையும் ‘எனது’ என்னும் புறப்பற்றையும் அறவே நீக்கி வாழ்கின்றனர்.

முற்றும் துறந்த இவர்கள் மனவலிமை உடையவர்கள். பிறர் தம்மை இகழ்ந்தபோதும் அவர்கள் மீது சினம் கொள்ளாமல் இரக்கம் கொள்வர். இத்தகைய உயர்ந்த பண்புகளே துறவியர் இயல்பாகின்றன. இத்தகைய துறவை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மக்களிடம் ஏன் எழுந்தது. அத்துறவறத்தை மேற்கொண்டவர்களின் வழ்வியல் பின்புலம் என்ன? என்ற சில வினாக்களுக்கு விளக்கம் தேட வேண்டி உள்ளது. அப்படிப் பார்க்க மன்னர்கள், வணிகர், செல்வந்தர், ஆண்கள், பெண்கள் எனத் துறவு மேற்கொண்டவர்கள் பற்றி பதிவுகள் பண்டைத் தமிழ் இலக்கிங்களில் காணக்கிடைக்கின்றன. குறிப்பாக ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் துறவை மேற்கொண்டுள்ளனர் என்ற செய்தி முக்கியமாக கவனிக்கதக்க ஒன்றாக உள்ளது. எனவே பாலின அடிப்படையிலான ஓர் ஒப்பீட்டையும் நாம் இங்குச் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

*பண்டைத் தமிழ் இலக்கியங்களில் எண்ணற்ற துறவிகள் பற்றிய அறிந்து கொள்ள முடிகின்றது. அவர்களில் இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார். அறவண அடிகள், சீவகன், கவுந்தி அடிகள் மாதவி, சுதமதி, மணிமேகலை ,குண்டலகேசி, புனிதவதியார் போன்றவர்கள் பற்றி மட்டும் இங்கு நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.*

**இளங்கோவடிகள்**

*சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகள் சேர மன்னன் செங்குட்டுவனின் தம்பி ஆவார். இவருடைய தந்தையார் பெயர் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் சோழ நாட்டைச்சேர்ந்த நற்சோணைக்கும் மகனாகப் பிறந்தவர். வாஞ்சி மாநகரில் அரசவையில் தந்தை சேரலாதன் மற்றும் தமையன் செங்குட்டுவனுடன் அமர்ந்திருந்த பொழுது அங்கு வந்த ஒரு குறி சொல்லுபவன், அரசனாக வீற்றிருக்க இலக்கணங்களை உடையவர் இளங்கோவடிகளே என்று கூற, இளங்கோவடிகள் குறி சொல்லுபவன் மீது கோபம் கொண்டு அவன் கூற்றைப் பொய் என நிரூபித்துக் காட்டுகிறேன் என்று கூறி அந்தக் கணமே துறவு பூண்டார். இறுதிவரை சமணத்துறவியாக வாழ்ந்த இவர் கோவலன் கண்ணகி கதையைச் சிலப்பதிகாரம் என்ற பெயரில் ஒரு காப்பியமாக வடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.*

***சீத்தலைச் சாத்தனார்.***

*இவர் பௌத்த துறவி என்பதை இவரது பெயரே விளக்குகின்றது. புத்தருக்குரிய பெயர்களுள் சாஸ்தா என்பதும் ஒன்று. இச்சொல் திரிந்து தமிழில் சாத்தன் என்று வழங்குகின்றது. சீத்தலை என்னும் அடை மொழிகொண்டு சீய் வழிந்தோடும் புண்ணுடைய தலையர் இவர் என்றும், பிறர் பாடும் பாட்டுக்களில் குற்றங்கண்டால் அக்குற்றத்தைப் பொறாமல், எழுத்தாணியால் தமது தலையைக் குத்திக் கொள்ள, அதனால் எப்போதும் இவர் தலையில் புண் இருந்து சீப்பிடித்திருந்தது என்றும் பொருந்தாக் கதைகளைக் கூறுவர். அதுமட்டுமன்றிச் சீத்தலை என்னும் ஊரைச் சேர்ந்தவராகையால் இவருக்குச் சீத்தலை என்னும் அடை மொழி கொடுக்கப் பட்டதென்று கூறுவர். இந்தக் கூற்றுப் பொருத்தமானதாகத் தோன்றுகின்றது. மதுரை மாநகரில் இவர் கூலவாணிகம் செய்திருந்தமை பற்றி இவரை மதுரைக் கூலவாணிகர் சாத்தனார் என்றும் கூறுவர்.*

*சீத்தலைச் சாத்தனார் என்று இவர் வழங்கப்படுதல் பற்றி, சீத்தலை என்னும் ஊரில் கிராமதேவதையாகக் கோயில் கொண்டிருந்த ஐயனாரின் பெயராகிய சாத்தன் என்னும் பெயரே இவருக்குப் பெயராக அமைந்தது என்று வேறு சிலர் கூறுவர். இது பொருத்தமாகத் தோன்றவில்லை.*

சாத்தன் என்னும் பெயர் தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் பெரும்பான்மையோருக்கு வழங்கிவந்தது. சங்ககாலப் புலவர்களில்மட்டும் இருபது பேருக்கு மேற்பட்டவர் சாத்தன் என்னும் பெயரைக் கொண்டவர்கள். ஆகவே, இவர்கள் ஒவ்வொருவரையும் வெவ்வேறு அடைமொழியுடன் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. நமது சாத்தனாருக்கும் அவ்வாறே சீத்தலை, மதுரைக் கூலவாணிகர் என்னும் அடைமொழிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

செந்தமிழ்ப் புலமை வாய்ந்த இவர் வாணிக முயற்சியை மேற்கொண்டிருந்தார். எனவே, புலவர் என்கிற முறையிலும், வணிகர் என்கிற முறையிலும் இவர் பல நாடுகளைச் சுற்றிப் பார்த்தவராதல் வேண்டும். எங்ஙனமெனில், அக்காலத்து வழக்கப்படி, தமிழ் நாட்டுப் புலவர்கள் வறியராயினும் செல்வராயினும் வெவ்வேறு நாடுகளுக்குச் சென்று, அவ்வந்நாட்டிலுள்ள அறிஞரோடு கலந்து உறவாடுவது வழக்கம். வியாபாரிகளும் வாணிக சம்பந்தமாக அயல் நாடுகளுக்குச் சரக்குக் கொள்ளவும் விற்கவும் போவது இயற்கை. அன்றியும், பொதுவாக வாணிகர்களுக்குத்தான் பொதுப்படையான பல செய்திகள் அறிய முடியும். இவர் பல நாடுகளுக்குச் சென்றவர் என்பது இவர் இயற்றிய மணிமேகலையில், புகார், மதுரை, வஞ்சி, காஞ்சீபுரம் முதலிய ஊர்களைப் பற்றிக் கூறியிருக்கும் முறையினின்று நன்கு தெரிய வருகின்றது. சேர நாட்டினை அரசாண்டிருந்த செங்குட்டுவனுக்கும், அவனது தம்பியாராகிய இளங்கோவடிகளுக்கும் இவர் உற்ற நண்பர். இவர் காலத்தில்தான் கோவலன் பாண்டி நாட்டில் கொலையுண்டான். கோவலன், கண்ணகி இவர்களின் செய்தியை இவர் செங்குட்டுவனுக்கும் இளங்கோவடிகளுக்கும் சொல்ல, அதைக் கேட்ட செங்குட்டுவன் கண்ணகியின் கற்பினைப் பாராட்டி, அவளுக்குக் கோயில் அமைத்தான்; இளங்கோ அடிகள் அவ்வரலாற்றினைச் சிலப்பதிகாரம் என்னும் காப்பியமாக இயற்றி, இவர் முன்னிலையில் அரங்கேற்றினார். சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகிய மணிமேகலை என்னும் காப்பியத்தை இவர் இயற்றி, இளங்கோ அடிகள் முன்னர் அரங்கேற்றினார்.

**அறவண அடிகள்**

இவர் காவிரிப்பூம்பட்டினத்தில் நெடுங்காலம் வாழ்ந்திருந்தவர். இவரது இளமையில் இவர் வடக்கே கங்கை முதல் தெற்கே இலங்கையில் உள்ள பாதபங்கய மலைவரையில் யாத்திரை செய்தவர் என்று தெரிகின்றது. பௌத்த தருமத்தை இவர் நன்கு கற்றவர். அதனோடு அதைப் பலருக்கும் போதித்துவந்தவர். இவர் நாவன்மை படைத்தவர் என்று தோன்றுகின்றது. காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு பௌத்தப் பள்ளியின் தலைவராக இருந்தவர். கோவலன் கொலையுண்ட செய்திகேட்டு, மாதவி தன் மகள் மணிமேகலையுடன் இவரது பள்ளியையடைந்து இவரிடம் பௌத்த தர்மங் கேட்டுச் சீலத்தை மேற்கொண்டாள். சோழமன்னன் மனைவி இராசமாதேவி மணிமேகலையைச் சிறைப்பிடித்து

வைத்திருந்தபோது, அவளைச் சிறை வீடுசெய்ய இவர் அரண்மனை சென்றார். இவரது வருகையைக் கண்ட இராசமாதேவி மிகுந்த வணக்கத்தோடு இவரை வரவேற்றாள் என்று கூறப்படுவதினின்றும், அரச குடும்பத்தினராலும் இவர் நன்கு மதிக்கப்பட்டிருந்தவர் என்பது விளங்கும். காவிரிப்பூம்பட்டினத்தில் கடற்பெருக்குண்டானபோது, இவர் அதனைவிட்டு மாதவியுடன் சேரநாட்டு வஞ்சிமாநகரம் சென்று, அங்குச் சிலநாள் தங்கியபின், காஞ்சிமாநகரம் சென்று, கடைநாள் வரையில் அங்கேயே தங்கியிருந்தார். பின்னர், அங்கு வந்த மணிமேகலைக்குப் பௌத்த தருமத்தை ஐயமறப் போதித்தார். நீண்டநாள் வாழ்ந்திருந்த இவர் காஞ்சிமா நகரத்திலே நிர்வாணம் பெற்றார். இவரது காலம் முதல் நூற்றாண்டின் பிற்பகுதியும் இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியும் ஆகும்.

இப்பொழுது காஞ்சீபுரத்தில், அறப்பணஞ்சேரி என்னும் பெயருடைய தெரு ஒன்று இருக்கிறதென்றும், அது அறவணஞ்சேரி என்பதன் மரூஉ என்றும், இந்த அறவணஞ்சேரி என்னும் தெருவில் அறவண அடிகள் வாழ்ந்திருத்தல் கூடுமென்றும், அதனால் அவர் பெயரால் அறப்பணஞ்சேரி (சேரி=தெரு) என்று வழங்கப் பட்டதென்றும் கூறுவர் வித்வான் மு. இராகவ அய்யங்கார் அவர்கள்.

**சீவகன்**

ஏமாங்கத நாட்டு மன்னர் சச்சந்தன் - ராணி விசயை இணையரின் மகன் ஆவார். கட்டியங்காரன் என்னும் அமைச்சன் சூழ்ச்சியால் மன்னன் சச்சந்தனைக் கொன்று, ஏமாங்கத நாட்டினைக் கைப்பற்றினான். குழந்தைப் பருவம் முதற்கொண்டு சீவகனைக் கந்துக்கடன் என்னும் வாணிகன் வளர்த்து வந்தான். பருவ வயதில், சீவகன் தன் ஆற்றலால் எட்டுப் பெண்களைத் திருமணம் செய்து கொள்கின்றான். கந்தர்வ தத்தை-இசையில் வென்று கரம்பிடிக்கிறான் பின்னர் .சுர மஞ்சரி, குணமாலை, பதுமை, கேமசரி, விமலை, கனகமாலை, இலக்கணை என அடுதடுத்து எட்டுப் பெண்களைத் திருமணம் செய்வதன் மூலம் சேர்ந்த படைவீரர்களை ஒன்று திரட்டுகின்றான். பின்னர் அவன் தன் தந்தை இழந்த நாட்டைக் கைப்பற்றுவதற்கு, தாயின் அறிவுரையோடு, மாமன் கோவிந்தனின் துணைக்கொண்டு, அமைச்சர் கட்டியங்காரனுடன் போரிட்டு ஏமாங்கத நாட்டை மீட்டெடுகின்றான். 30 ஆண்டுகள் நீதியுடன் ஆட்சி செய்த சீவகன், ஆட்சிப் பொறுப்பை மகனிடம் அளித்துவிட்டுத் துறவறம் பூண்டு, இறுதியில் வீடுபேறு அடைகிறான்.

**கவுந்தி அடிகள்**

சிலப்பதிகாரக் கதை மாந்தர்களுள் ஒருவர். இவர் ஒரு சமணபெண் துறவி ஆவார். கோவலனையும் கண்ணகியையும் மதுரைக்கு அழைத்து வருவது கவுந்தி

அடிகளேயாகும். வரும் வழியில் சிலர் கண்ணகியையும் கோவலனையும் பார்த்து வினவ கவுந்தி அடிகளோ "இவர்கள் எம் மக்கள்" என்கிறார். கேட்டவர்களோ "உம் மக்கள் ஒருவரையொருவர் மணமுடிப்பரோ" என்று கேலி பேச அவர்களை நரிகளாகுமாறு சாவிக்கிறார். இது இவரது தவவலிமைக்கு தக்க சான்றாகும். பின்னர் மாதரி என்னும் விருந்தோம்பலில் சிறந்த பெண் வீட்டில் கண்ணகியை தங்கவும் வைக்கிறார். கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டு உண்ணா நோன்பிருந்து இறந்து போகின்றாள்.

***மாதவி***

சோழநாட்டில் கனிகையர் குலத்தில் பிறந்த மாதவி தான் கற்ற நாட்டியத்தை அறங்கேற்றம் செய்கிறாள். கரிகால சோழனின் சபையில் அவளது நாட்டிய நிகழ்வைக் கோவலன் எனும் வணிகன் அவளிடம் காதல் கொள்கிறான். பெரும் பொறகாசைக் கொடுத்து அவளை அடைகிறான். தன் மனைவி கண்ணகியைப் பிரிந்து மாதவியுடன் கூடி வாழ்ந்து வரும். கோவலனுக்கும் மாதவிக்கும் மணிமேகலை என்ற மகள் பிறக்கிறாள். சிறிது காலத்தில் கோவலனின் செல்வம் அனைத்தும் கரைந்து போகின்றது. அதனால் மனம்திருந்திய அவன் மீண்டும் கண்ணகியிடம் செல்கின்றான்.

கோவலன் மற்றும் கண்ணகியின் மறைவிற்குப் பிறகு, மாதவி பொது வாழ்விலிருந்தும் கலைப்பணியிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்கின்றாள். தான் கடந்த காலத்தில் வாழ்ந்த முறையையும் நினைவுகளையும் மாற்ற நினைத்த மாதவி, அவற்றின் சுவடுகளும் உலக சுகங்களும் இன்றி மணிமேகலையை வளர்க்க எண்ணி புத்த_சமய மடம் ஒன்றில் அவளைச் சேர்த்துவிட்டு. தன் இறுதிகாலம் வரை துறவியாகவே வாழ்கின்றாள்.

***மணிமேகலை***

காவிரிப்பூம் பட்டினத்தில் செல்வத்திற் சிறந்த கோவலன் என்பவனுக்கும் அவனது காமக் கிழத்தி மாதவி என்பவளுக்கும் பிறந்தவள் மணிமேகலை. இக்குழந்தை செல்வமாக வளர்க்கப்பட்டுத் தக்க வயதடைந்த பின்னர், இசைக்கலை நாடகக்கலைகளைக் கற்றுத் தேர்ந்து மங்கைப்பருவம் அடைந்தது. இந்நங்கையின் கட்டழகினையும், இசைக்கலை நாடகக்கலைகளில் அடைந்துள்ள தேர்ச்சியினையும் கண்டு, சோழ அரசன் மகன் உதயகுமாரன் என்பவன் இவள்மேல் காதல் கொண்டான்.

இவ்வாறிருக்க, மணிமேகலையின் தந்தை கோவலன் மதுரைமா நகரம் சென்று, ஆங்குப் பொய்க்குற்றஞ் சாற்றப் பெற்றுக் கொலையுண்டிறந்தான். கோவலன் இறந்த கொடுஞ் செய்தியைக் கேட்டு மாதவி மனம் நொந்து, உலகினை வெறுத்துத் தன் மகள்

மணிமேகலையுடன் அறவண அடிகள் என்னும் பௌத்த பிக்கு இருந்த பௌத்தப் பள்ளியில் சரணடைந்து, பௌத்த சீலத்தை மேற்கொண்டாள். மணிமேகலையை நாடகக்கணிகை வாழ்க்கையில் புகுத்த அவளது பாட்டி சித்திராபதி என்பவள் கடுமையாக முயன்றாள். ஆயினும், மணிமேகலை அந்த வாழ்க்கையில் புக இசையவில்லை. அரசன் மகன் உதயகுமாரனும் அவளைத் தன் காமக்கிழத்தியாக்க முயன்றான். அதற்கும் அவள் உடன்படவில்லை. ஆனாலும், அவன் அவளை விடாமல் அவளிடம் சென்று, அடிக்கடி பிக்குணி கோலத்தை விட்டுவிடும் படி வேண்டினான். மணிமேகலை இலங்கையின் வடபால் உள்ள மணிபல்லவம் சென்று, அங்கிருந்த புத்தர் பாதபீடிகையைத் தொழுது, மீண்டும் காவிரிப்பூம்பட்டினம் வந்தாள். அது முதல் அவள் உலகவறவி என்னும் அம்பலத்தில் சென்று, தான் ஐயமேற்று வந்த உணவை அங்கிருந்த கூனர், குருடர், முடவர் முதலிய எளியவருக்குக் கொடுத்து, அவர்களது பசிப்பிணியை நீக்கிவந்தாள். இந்தச் செய்தியைக் கேட்ட சோழமன்னன் மணிமேகலையை அழைத்து, அவளது பொதுநல ஊழியத்தைப் பாராட்டி, அவளுக்கு வேண்டிய வரத்தைக் கேட்கச் சொன்னான். அவள் சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றியமைக்கவேண்டும் என்று வேண்ட, அவ்வாறே அரசன் செய்தான்.

காயசண்டிகை என்பவள் ஒருத்தி வடநாட்டினின்றும் காவிரிப்பூம்பட்டினம் வந்து பிச்சையேற்றுண்டு வாழ்ந்து வந்தாள். அவள் மணிமேகலையைப் போன்ற உருவம் உடையவள். இந்தக் காயசண்டிகையைத் தேடிக்கொண்டு அவள் கணவன் அந்நகரத்திற்கு வந்தான். அப்போது, உலகவறவி என்னும் அம்பலத்தில் மணிமேகலையுடன் உதயகுமாரன் சொல்லாடிக்கொண்டிருந்தான். அவனுக்கு மணிமேகலை, நிலையாமையைக் கூறித் தன்மேல் அவனுக்குள்ள காதலை விட்டுவிடும்படி கூறிக்கொண்டிருந்தாள். காயசண்டிகையைத் தேடிக்கொண்டு வந்த அவள் கணவன் காயசண்டிகை உருவில் இருந்த மணிமேகலையைக் கண்டு, அவள்தான் தன் மனைவியாகிய காயசண்டிகை என்று தவறாகக் கருதி, அவள் இன்னொரு ஆடவனோடு பேசுவதைக் கண்டு பொறுத்துக் கொள்ளாமல் உண்மையை அறிய அங்கு ஒரு மூலையில் பதுங்கியிருந்தான். உதயகுமாரன் மணிமேகலையை விட்டுச் சென்று, இரவு வந்தபோது மீண்டும் அவ்விடம் வந்தான். உருவ ஒற்றுமையால் தன் மனைவி என்று தவறாகக் கருதியிருந்தவனாதலின், காயசண்டிகையின் கணவன் இரவில் வந்த உதயகுமாரனை வாளால் வெட்டி வீழ்த்தினான். தன் மனைவி என்று மணிமேகலையைக் கருதியதும், உதயகுமாரன் அரசன் மகன் என்று அறியாததும் இந்நிகழ்ச்சிக்குக் காரணம்.

*தவறுதலால் ஏற்பட்ட இந்த நிகழ்ச்சியைப் பொழுது விடிந்த பின்னர் மக்கள் அறிந்தனர். உலகவறவியில் இருந்த முனிவர்கள் இதனை அரசனுக்கு அறிவித்தனர். அரசன் உண்மை அறிந்து, மணிமேகலையை நகரமக்கள் துன்புறுத்தா வண்ணம் காவலில் வைத்தான். இராசமாதேவி தன் மகன் இறந்தது மணிமேகலையினால் என்று கருதி, அவளுக்கு ஊறு செய்ய நினைத்து, அவளைக் காவலினின்று தன்னிடம் அழைத்துக்கொண்டு, அவளுக்குப் பற்பல துன்பங்களைச் செய்து பார்த்தாள்; ஒழுக்கவீனமுள்ளவள் என்று அலர் தூற்றவும் முயன்றாள். இவற்றிற்கெல்லாம் மணிமேகலை உட்படாமல் தன் நிலையைக் காத்துக்கொண்டாள். இவளது உண்மை நிலையை அறிந்த பின்னர், இராசமாதேவி தன் குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டு மணிமேகலையைச் சிறைவிட்டாள்.*

*பின்னர், மணிமேகலை, தான் அந்நகரில் இருந்தால் அரசகுமாரன் இறப்பதற்குக் காரணமாயிருந்தவள் என்று ஊரார் குறைகூறுவராதலின், அந்நகரத்தில் இருக்க விரும்பாமல், அறவண அடிகள், மாதவி முதலியவர்களிடம் விடை பெற்றுச் சாவகநாடு சென்றாள். சில நாட்கள் சென்ற பின்னர், அங்கிருந்த சேர நாட்டின் தலைநகரமான வஞ்சிமா நகர் சென்று, அங்கு வாழ்ந்திருந்த பற்பல சமயத்தவரையுங் கண்டு, அவ்வவர்களின் சமய உண்மைகளை அறிந்தாள். அவற்றால் ஒன்றும் மனம்தேறாமல், கடைசியாகக் காஞ்சிமா நகருக்குச் சென்று, அங்கு வந்திருந்த அறவண அடிகளிடம் பௌத்த தரும மெய்ப்பொருளைக் கேட்டு உணர்ந்து முழுமை பெற்ற பெண் துறவியானாள்.*

**சுதமதி**

*மணிமேகலையின் தோழியான சுதமதி தாயை இழந்தவள். உறுதி உடைய உள்ளமும் பட்டினி விரதம் இருந்து உண்ணும் நோன்புடையவரின் மகளான அவள் மருதவேகன் என்ற விஞ்சையனைக் காதலித்து இரகசிய திருமணம் செய்துகொண்டாள். கொஞ்ச காலத்தில் அவளது கணவன் அவளைச் சமணப் பள்ளியில் விட்டுவிட்டு சென்று விடுகின்றான்.*

*தன் மகளைக் காணாமல் தந்தை வருந்தினார். பின்னர் குமரிக் கடலில் வானரங்கள் கட்டிய பெரிய நீர்த்துறையில் நீராடச் செல்லும் மக்கள் பலரோடு தானும் சேர்ந்து சென்றார். செல்லுமிடங்கள் எல்லாம் தன் மகளைத் தேடினார். காவிரி கடலில் கலக்கும் பெருந்துறையில் நீராட சென்ற பார்ப்பனரோடு சென்றவர் சமணப் பள்ளியில் அவளைக் கண்டு, "என் மகளே! இங்கு எவ்வாறு வந்தாய்?" என்று துயரத்தோடு வினாவி. அவளைத் தழுவி வருந்தினார்.*

*ஒரு நாள் அண்மையில் கன்று ஈன்ற நிலைமையுடைய ஒரு பசு அவளது தந்தை மேற் பாய்ந்து வயிற்றில் குத்திப் புண்ணாக்கியது; பெருங்குடர் வெளி வந்து விட்டது! தனக்குற்ற*

துன்பத்தைத் தாங்க மாட்டாதவராய்த் தன்னுடைய மகள் இருந்த இடமாதலால் ஆதரிப்பார் என்று நினைத்தார்! அலரி மாலையை உள்ளங்கையில் கொண்டாற் போல நீண்ட பெருங்குடரை நிணத்துடன் கையில் ஏந்திக்கொண்டு சமணப் பள்ளியை அடைந்தனர். "சமணப் பெரியோர்களே! உம்மைச் சரணடைந்தோம்!" என்று அவரடியில் வீழ்ந்தனர். ஆனால், மாசற்ற தவவடிவம் உடைய சமணப் பெரியோர்களோ அவளது தந்தையின் அவல நிலைமை சமணப் பள்ளிக்குரிய தன்மை அன்று என்று கூறி, அவளிடம் சினந்து அவளை வெளியே செல்லுமாறு கையை அசைத்துக் குறி செய்தனர். ஈவு இரக்கம் இல்லாமல் வெளியேற்றப்பட்டு. வீதியில் நின்றனர். போவோர் வருவோர் எல்லோரையும், "பாதுகாப்போர் யாரும் இல்லாத எங்களை ஆதரித்து அருளும் அறவோர் யாரேனும் இருக்கின்றீரோ?" என வருத்தத்துடன் கூவினர்.

அவ்வேளையில் சங்க தருமன் என்னும் தவமுனிவன் அவ்வழியே வந்தான். வானைத் தொடும் மாடங்களை உடைய இல்லங்கள் தோறும் செல்பவன்; கையில் பிச்சைப் பாத்திரம் உடையோன் கதிரவன் காயும் உச்சிப்பொழுதிலும் குளிர் நிலாவைப் போன்ற முகத்தோன். பொன் போல் திகழும் மஞ்சள் நிறமுடைய அழகிய ஆடை அணிந்திருந்தான். அம்முனிவன் அவர்களை அணுகி. "என்ன துன்பம் உற்றீர்?" என்று வினவினான். அன்பு விரவிய அருள் சுரக்கும் அமுதமொழிகளால் அவர்களது செவியகம் நிறையச் செய்து உள்ளங் குளிரச் செய்தான். பின்னர் தன் கையிலிருந்த பாத்திரத்தை சுதமதியிடம் கொடுத்தான். அவளது தந்தை உற்ற துன்பத்தை நீக்குவதற்காக விரைவாக அவரது உடலைத் தழுவி எடுத்துச் சுமந்து சென்றான். புத்த முனிவர்கள் வாழும் தவப்பள்ளியைக் காட்டி அங்கு புகுந்தான். என் தந்தையை இறக்கும் துன்பத்திலிருந்து அம்முனிவன் நீக்கினான். பின்னர் அச்சங்க தருமன் அவர்களுக்குப் புத்ததேவன் பெருமையை உணர்த்தினான். அவற்றைக் கேட்ட அவள் அப்பெருமானின் திருவடிகளையேயன்றி வேறு பொருட்களை என்னுடைய நா பாராட்டிப் பேசவோ, புகழ்ந்து போற்றவோ செய்யாது உறுதி பூண்டாள்.

**குண்டலகேசி**

குண்டலகேசி செல்வச் செழிப்புமிக்க வணிகர் குலத்தில் பிறந்தவள். அவள் பெற்றோர் இட்ட பெயர் பத்தரை. அவள் பருவமடைந்து இனிது இருந்த சமயத்தில் அவ்வூரில் சத்துவான் என்பவன் வழிப்பறிக் கொள்ளை அடித்து, அரசனால் கொலைகளத்துக்கு அனுப்பப்பட்டான். அப்போது அவனைச் சாளரத்தின் வழியே கண்டு, அவள் அவன் மீது காதல் கொண்டாள். அது அறிந்த அவள் தந்தை அரசனுக்கு பொருள் தந்து அக்கள்வனை மீட்டு அவளுக்கு மணமுடித்து வைத்தார். இருவரும் சிலகாலம் இனிது வாழ்ந்த பின்னர், அவனுக்கு மனைவியின் நகைகளை கொள்ளை அடிக்கும் எண்ணம் வரவே, அவளைத்

தனியே அருகில் இருந்த சேரர் மலை உச்சிக்கு அழைத்துச் சென்றான். அவன் நடத்தையில் சந்தேகம் கொண்ட பத்தரை அது பற்றி கேட்க, அவன் நகைகளைப் பறித்துக் கொண்டு அவளை மலையுச்சியிலிருந்து தள்ளிவிட இருப்பதைக் கூறினான். அதைக் கேட்ட அவள் சாவதற்கு முன் கடைசியாக அவனை ஒருமுறை சுற்றி வந்து வணங்கவிரும்புவதாகக் கூறி அவனை அம் மலை உச்சியிலிருந்து தள்ளி விட்டாள். பின்னர் அவள் சமண மதத்தை தழுவினாள். அவள் தலைக் கூந்தல் பனங்கருக்கு மட்டையால் மழிக்கப்பட்டது. பின்னர் வளர்ந்த அவள் முடி வளைந்து குண்டலம் போக் காட்சி யளித்ததால் குண்டலகேசி என வழங்கப்பட்டாள். அவள் பல இடங்களில் வாதம் புரிந்து, கடைசியில் புத்தரிடம் ஞானத் தெளிவு பெற்று பௌத்தத் துறவியானாள்.

**புனிதவதியார்**

முற்காலத்தில் காரைவனம் எனப்பட்ட மாநகர், தற்போது காரைக்கால் என்று வழங்கப்படுகிறது. இந்நகரில் காரைக்கால் அம்மையார் தனதத்தன், தர்மவதி தம்பதியருக்கு மகளாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் புனிதவதி. சிவ வழிபாட்டில் ஈடுபாடு கொண்ட வணிகக் குடும்பத்தில் பிறந்தார். சிறுவயதிலிருந்தே சிவபெருமான் மீது பக்தி கொண்டவராக இருந்தார்.

ஒரு சமயம் பரமதத்தன் தனது கடையிலிருந்தபோது ஒரு வியாபாரி இரண்டு மாங்கனிகளைக் கொண்டுவந்து அவரிடம் கொடுத்தார். கனிகளைப் பெற்ற பரமதத்தன், அதனைத் தன் வீட்டிற்குக் கொடுத்து விட்டார். அவரது வீட்டிற்கு சிவனடியார் ஒருவர் உணவு வேண்டி வந்தார். அவரை வரவேற்று அமரச் செய்தார் அம்மையார். மதிய உணவு தயாராக இல்லாததால் தயிர் கலந்த அன்னம் படைத்து அத்துடன் தனது கணவன் கொடுத்து அனுப்பிய ஒரு மாங்கனியையும் தந்து உபசரித்தார். மதிய உணவிற்கு வீட்டிற்கு வந்த பரமதத்தனுக்குப் பல வகைப் பதார்த்தங்களுடன் அன்னம் பரிமாறிய அம்மையார், சிவனடியாருக்குப் படைத்தது போக மீதமிருந்த ஒரு மாங்கனியை அவருக்கு வைத்தார்.

மாங்கனியின் சுவை நன்றாக இருக்கவே, மற்றொரு கனியையும் தனக்கு வைக்கும்படி கேட்டார் பரமதத்தன். அம்மையார் செய்வதறியாது திகைத்துச் சமையலறைக்குள் சென்று சிவபெருமானிடம் வேண்டினார். "மெய் மறந்து நினைந்து உற்ற இடத்து உதவும் விடையவர் தான் தம் மனம் கொண்டு உணர்தலுமே" அவர் கையில் ஒரு மாம்பழம் தோன்றியது. மகிழ்ச்சி அடைந்த அம்மையார் அதனைக் கணவனுக்குப் படைத்தார். முதலில் வைத்த மாங்கனியைவிட இக்கனி அதிக சுவையுடன் இருக்கவே சந்தேகமடைந்த பரமதத்தன், காரணம் கேட்டார். அம்மையார் நடந்ததைக் கூறினார். அக்காரணத்தைப் பரமதத்தன்

நம்பவில்லை. சிவபெருமான் கனி தந்தது உண்மையானால், மீண்டும் ஒரு கனியை வரவழைக்கும்படி கூறினான். அம்மையார் சிவபெருமானை வணங்க, மீண்டும் ஒரு மாங்கனி கிடைத்தது. இதைக் கண்டு வியந்த பரமதத்தன் அவரைத் தெய்வப் பெண் என்று கருதினார். உடனுறையத் தனக்குத் தகுதியின்மையால் தான் அவரை விட்டு நீங்கிவிடுதல் வேண்டுமென்னும் முடிவில் அவரை நீங்கத் துணிந்தார். வாணிபம் செய்ய விரும்பும் பண்டங்களும் பொருந்துவனவற்றை நிரம்ப ஏற்றிக்கொண்டு கடலின்மீது பயணமாகச் சென்றார்.

பின்னர் பரமதத்தன் பாண்டிய நாடான மதுரை மாநகர் சென்று மற்றொரு பெண்ணை மணம் முடித்து அங்கேயே வாழ்ந்தார்.சிலகாலம் கழித்து அவளுக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது அந்த குழந்தைக்கு அம்மையாரின் திருப்பெயரையே வைத்தார். பரமதத்தன் பாண்டிய நாட்டில் இருக்கும் செய்தி, அம்மையாருக்கும் அவருடைய உறவினர்களுக்கும், மற்ற வணிகர்கள் மூலம் தெரிய வந்தது. அவர்கள் அம்மையாரை அழைத்துக்கொண்டு பாண்டி நாட்டை நோக்கி புறப்பட்டு போனார்கள். பாண்டி நாட்டில் பரமதத்தன் இருக்கும் நகருக்கு வெளியே உள்ள ஒரு இடத்தில் தங்கி, அம்மையார் வந்திருக்கும் செய்தியை பரமதத்தனுக்கு ஒரு ஆள் மூலம் சொல்லி அனுப்பினர். தன்னைத் தேடிவந்த மனைவியைக் கண்ட பரமதத்தன் அவரைத் தெய்வமாக வணங்கித் தனது இரண்டாவது மனைவி, குழந்தையுடன் காலில் விழுந்தார். இவர்கள் தெய்வத்தன்மை உடையவர்கள், அதனால் தான் காலில் விழுந்தேன். நீங்களும் இவரைப் போற்றி வழிபடுங்கள் என்று கூறினான். அதன் பிறகு "கணவருக்காக தாங்கிய உடல் நீங்கி, இறைவரைப் போற்றுகின்ற பேய்வடிவத்தை அடியேனுக்கு நற்பாங்கு பொருந்த அருளவேண்டும்" என்று இறைவனிடம் வேண்டி நின்றார். தாம் வேண்டிய அதனையே பெறுவாராகி உடம்பில் தசையும் அதனை இடமாகக்கொண்டு அடைந்த அழகுகளும் ஆகிய இவை எல்லாவற்றையும் உதறி, அனைவரும் வணங்கும் சிவபூத கண வடிவம் பெற்றார்.

அம்மையார் இறைவனைக் காணக் கயிலாயம் சென்றார். கயிலாயம் இறைவன் உறையும் புனிதமான இடம் என்பதால், அங்கு தரையில் கால் ஊன்றாமல், தலைகீழான நிலையில் சென்றார். கயிலையில் இறைவனுடன் இடங்கொண்டு அமர்ந்திருந்த பார்வதி அம்மை, தலையால் நடந்துவரும் அம்மையைக் கண்டு இவர் யாரெனக் கேட்க "நம்மைப் பேணும் அம்மை காண்" எனக் கூறி "அம்மையே வருக" என்றழைத்து "வேண்டுவன கேள்" என விளித்தார், அதற்கு அம்மையார் "பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் இறைவா உனையென்றும் மறவாமை வேண்டும், இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி, அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க" என்றார்.அவ்வாறே அருளிய இறைவன் அவருக்கு

தன் திருத்தாண்டவம் காட்டி திருவாலங்காட்டிற்கு வரப்பணித்து அங்கு அருளிய இறைவன் தன் திருவடிக் கீழ் என்றும் இருக்க அருளினார்.

**முடிவுரை**

இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார். அறவண அடிகள், சீவகன் ஆகியோர் துறவிற்கான காரணங்களும் கவுந்தி அடிகள் மாதவி, சுதமதி,மணிமேகலை ,குண்டலகேசி, புனிதவதியார் போன்றவர்களின் காரணங்களும் முற்றிலும் முரண்பட்டவையாக உள்ளன. சீத்தலைச் சாத்தனார், அறவண அடிகள் துறவின் பின்புலம் குறித்து அறிய முடிவில்லை. சீவகன் தன்னுடைய இல்லறக் கடமைகளை முடித்த பின்னர் துறவு மேற்கொள்கின்றான். இளங்கோவடிகள் துறவு ஆவேசத்தில் எடுத்த ஒன்றாக உள்ளது. கவுந்தியடிகள் ஏன் துறவியாக மாறினாள் என்பது பற்றி நமக்குச் சரியாகத் தெரியவில்லை. என்றாலும், அவரது செயல்பாடுகளின் பின்புலத்தில் ஏதோ பிரச்சனை (அவளது வாழ்க்கையில்) ஏற்பட்டதன் பின்னணியில் தான் அவள் துறவியாக மாறி இருக்கிறாள் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. காரணம் எதுவாயினும் அவள் துறவு மேற்கொண்ட சமண சமயத்தில் அவள் உயர்வு அடையவில்லை. அதனால்தான் கோவலன் வாழ்க்கையில் நடந்த சோகத்தில் இருந்து மீள முடியாமல் அவள் இறந்து விடுகிறாள். தன் காதலனால் ஏமாற்றப்பட்ட சுதமதி முதலில் சமண சமயத்தை நாடுகிறாள் பின் அச்சமயத்தில் இருந்து வெளியேறி பௌத்த சமயத்தைத் தழுவுகிறாள். இந்த இருவர் பின்னணியில் இருந்துதான் நாம் மணிமேகலையின் பௌத்த துறவு குறித்து ஆராயவேண்டும். மேற்குறித்த இரு பெண்களின் சமண சமய துறவின் தோல்விக்கான காரணம் பெண்களுக்கான இடம் அச்சமயத்தில் வழங்கப்பாடமைதான் என்றும் அதனால்தான் அவர்கள் அச்சமயத்தில் இருந்து புறம் தள்ளப்பட நிகழ்வுகள் நடந்துள்ளன என்பதும் புலனாகிறது. மாதவி மற்றும் குண்டல கேசியின் துறவும் வாழ்வின் மீதான விரக்தியே துறவிற்கான காரணங்காளாக இருந்துள்ளன. பெண்களின் துறவிற்கான காரணங்கள் வாழ்வின் மீதான வெறுமையே. ஆனால் ஆண்கள் துறவு முக்தியை நோக்கியதாக உள்ளது.